Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 09 (25-10-1993) திங்கட்கிழமை ஓசை 249

## உரிய தடுப்பு நடவடிக்கை எடுக்காவிடின் இலங்கையில் எயிட்ஸ் பரவும் அபாயம்

உரிய தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் எயிட்ஸ் நோய் இலங்கையிலும் பெருமளவில் பரவும் ஆபத்து ஏற்படும் என்று சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் அனைத்துலக எயிட்ஸ் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இலங்கையில் 96 பேருக்கு இவ் எயிட்ஸ் கிருமி தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 25 பேருக்கு இந் நோய் முழுமையாகத் தொற்றியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபன கணிப்பீட்டின்படி சுமார் 3000 பேருக்கு எயிட்ஸ் நோய் கிருமிகள் தொற்றியிருப்பதாக கூறப்படுகின்றது. கடந்த சில மாதங்களாகவே எயிட்ஸ் நோய் அதிகளவில் தொற்றியதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் எயிட்ஸ் நோய் தொற்றுவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளது

# இலக்க தகடற்ற வாகனத்தில் வருவோரால் கொழும்பில் தமிழ் இளைஞர் கடத்தல்

## தமிழர் மத்தியில் பதற்றம்

(கொழும்பு)

**கொழும்பில் தமிழ் இளைஞர்கள் பெருந் தொகையில் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ள அதேவேளை, இலக்கத்தகடில்லா வாகனங்களில் வருவோரால் கடத்திச் செல்லப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட சிலர் பற்றிய தகவல்கள் இல்லை எனவும், இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுவதாக மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து கொழும்பில் வாழும் தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இலக்கம் இல்லாத வாகனங்களில் இரவுவேளைகளில் வருவோரால் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு வருவதாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறு கடத்தப்படுவதை கண்ணால் கண்டவர்கள், உறவினர்கள் கூட இது தொடர்பாக பொலிசாரிடம் முறையிட அஞ்சுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட சிலர் தாம் கண் கட்டப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார். இவர்கள் இராணுவத்தினராலோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களாலேயோ கடத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலர் தொடர்பாக இதுவரை என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இதேவேளை கொழும்பில் வெவ்வேறு பகுதிகளிலுமிருந்து கடந்தவாரம் கடத்திச் செல்லப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இதனால் அவர்களின் பெற்றோர் பீதியடைந்துள்ளனர். கொழும்பிலுள்ள தமிழர் இக்கடத்தல் நடவடிக்கையினால் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

இதேவேளை தென்னிலங்கையின் பல பாகங்களிலும் இளைஞர்களின் பல சடலங்கள் கண்கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் வீதிகளில் வீசப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவ்வாறான சடலங்கள் மோட்டார் வாகனங்களில் வருவோரால் வீதிகளில் போடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது

## துப்பாக்கிச் சூட்டிற்கு இராணுவ அதிகாரி பலி

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தார் வவுனியா நகருக்கு அப்பால் நடைபெற்றுள்ள சம்பவமொன்றின் போது துப்பாக்கிச் சூட்டினால் இவர் இறந்துள்ளார்.

சாள்ஸ்புள்ளே என்ற இந்த இராணுவ அதிகாரி லெப்ரினற் தரத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என எதுவும் தெரியாது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். வைத்தியசாலை பிரேத அறையில்

## வாழ்வில் நான் அனுபவிக்காத துர்நாற்றத்தை அனுபவித்தேன்

### 'ராவய' குழுவின் யாழ். விஜயம்

நாம் யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த ஆரம்ப நாளில் கொக்குவில் அம்மன் கோவில் பகுதியில் விமானக் குண்டு வீச்சு நடைபெற்றது,

இச்சம்பவத்தை பார்ப்பதற்காக நாம் நேரடியாக ஸ்தலத்திற்கு விரைந்தோம் அங்கு பரவலாக நால்வர் இறந்து கிடந்தனர் பல சிறு பிள்ளைகள் காயமடைந்திருந்தனர். அருகில் இருந்த பாலர் பாடசாலை மாணவர்களே காயமடைந்திருந்தனர். இப்பாடசாலைப் பகுதியில் வட்டமிட்ட குண்டுவீச்சு விமானத்தைக் கண்ட பெற்றோர் தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த போது ஒருவர் காயமடைந்தார் அத்துடன் அப்பகுதியில் வசித்து வந்த மக்களில் சிலரும் காயமடைந்திருந்தனர் என 'ராவய' செய்தியாளர் தமது யாழ்ப்பாணத்து விஜயம் குறித்து பி பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இரண்டாவது நாளாக அவர் பி பி, ஸிக்கு வழங்கிய பேட்டியில் தமது விஜயம் பற்றி மேலும் விபரிக்கையில்

( 4 ஆம் பக்கம் பகர்க்க )

## புலிகளின் தாக்குதலால் ஒருமாதத்தில் 157 படையினர் பலி; 302 பேர் காயம்

கடந்த ஒரு மாத காலத்தில் 149 சிறிலங்கா இராணுவத்தினரும், எட்டுப் பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாராளுமன்றத்தில், அவசரகால நிலை நீடிப்புத் தொடர்பான விவாதத்தின் போது அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார். டன் இராணுவம் பின்வாங்கிச் சென்ற இராணுவ நடவடிக்கை வெற்றிகரமானது என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரியப்படுத்தினார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் யாது என்றும் தெரிவித்த அவர், அரசியல் தீர்வு மூலமே போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்றும் கூறினார்.

அமைச்சர் எஸ். செல்லச்சாமி இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையில் தீர்வு காண வேண்டும் என்றும் பேசினார்.

பதுளை மாவட்டப் பாரா

# சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள்

களில் இரவுவேளைகளில் வருவோரால் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு வருவதாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறு கடத்தப்படுவதை கண்ணால் கண்டவர்கள், உறவினர்கள் கூட இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட அஞ்சுவதாகவும் தெரிவித்தார்

இவ்வாறு கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட சிலர் தாம் கண் கட்டப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார். இவர்கள் இராணுவத்தினரோடு தொடர்புடையவர்களாலேயோ கடத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலர் தொடர்பாக இதுவரை என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இதேவேளை கொழும்பில் வெவ்வேறு பகுதிகளிலுமிருந்து கடந்தவாரம் கடத்திச் செல்லப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இதனால் அவர்களின் பெற்றோர் பீதியடைந்துள்ளனர் கொழும்பிலுள்ள தமிழர் இக்கடத்தல் நடவடிக்கையினால் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

கையின் பல பாகங்களிலும் இளைஞர்களின் பல சடலங்கள் கண்கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் வீதிகளில் வீசப் பட்

இவ்வாறான சடலங்கள் மோட்டார் வாகனங்களில் வருவோரால் வீதிகளில் போடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது

## துப்பாக்கிச் சூட்டிற்கு இராணுவ அதிகாரி பலி

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தார் வவுனியா நகருக்கு அப்பால் நடைபெற்றுள்ள சம்பவமொன்றின் போது துப்பாக்கிச் சூட்டினால் இவர் இறந்துள்ளார்.

சாள்ஸ்புள்ளே என்ற இந்த இராணுவ அதிகாரி லெப்ரினற் தரத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என எதுவும் தெரியாது என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பகுதியில் விமானக் குண்டு வீச்சு நடைபெற்றது,

இச்சம்பவத்தை பார்ப்பதற்காக நாம் நேரடியாக ஸ்தலத்திற்கு விரைந்தோம் அங்கு பரவலாக நால்வர் இறந்து கிடந்தனர் பல சிறு பிள்ளைகள் காயமடைந்திருந்தனர். ... சாலைப் பகுதியில் வட்டமிட்ட குண்டுவீச்சு விமானத்தைக் கண்ட பெற்றோர் தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்த போது ஒருவர் காயமடைந்தார் அத்துடன் அப்பகுதியில் வசித்து வந்த மக்களில் சில

யம் குறித்து பி பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இரண்டாவது நாளாக அவர் பி பி, ஸிக்கு வழங்கிய பேட்டியில் தமது விஜயம் பற்றி மேலும் விபரிக்கையில்

( 4 ஆம் பக்கம் பகர்க்க )

# புலிகளின் தாக்குதலால் ஒருமாதத்தில் 157 படையினர் பலி; 302 பேர் காயம்

கடந்த ஒரு மாத காலத்தில் 149 சிறிலங்கா இராணுவத்தினரும், எட்டுப் பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாராளுமன்றத்தில், அவசரகால நிலை நீடிப்புத் தொடர்பான விவாதத்தின் போது அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த ஒரு மாத காலத்தில் மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்களில் 302 படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கிச் சென்ற இராணுவ நடவடிக்கை வெற்றிகரமானது என்று பாராளுமன்றத்தில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா தெரியப்படுத்தினார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ரத்வத்தை, வடபகுதியில் நிலவும் உணவுப் பற்றாக்குறை பற்றி விரித்தார் தமிழ் மக்களின் அவல நிலையைத் தீர்க்க வேண்டும் என்றும், நடக்கும் போருக்கு இராணுவத் தீர்வு காணமுடியாது என்றும் தெரிவித்த அவர், அரசியல் தீர்வு மூலமே போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்றும் கூறினார்.

அமைச்சர் எஸ். செல்லச்சாமி இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி முறையில் தீர்வு காண வேண்டும் என்றும் பேசினார்

பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பேசும் போது, அரசு பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், போரினால் தீர்வு காணலாம் என்ற நிலை தளர்ந்து விட்டது எனவும் கூறினார்.

# சிறிலங்கா அரசின் நடவடிக்கைகள் தமிழரை போராட நிர்ப்பந்திக்கிறது!

## கொமன்வெல்த்திற்கு புலிகள் கடிதம்

(பாரிஸ்)

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்துவதிலேயே அரசாங்கம் அக்கறையாக உள்ளது. தமிழ் மக்களை அடக்குவது என்ற தமது தீர்மானத்தில் சிறிலங்கா அரசாங்கம் பிடிவாதமாக நின்றால் தமது சொந்த இறைமையுள்ள நாட்டை மீளப்பெறுவதற்கு தொடர்ந்து போராடுவதைத்தவிர தமிழ் மக்களுக்கு மாற்றுவழி எதுவும் இருக்காது என விடுதலைப்புலிகள் சர்வதேச அலுவலகம் சைப்பிரஸில் தற்போது கூடியுள்ள பொதுநலவாய அமைப்புநாடுகளின் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழரின் சுயநிர்ணய உரிமை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படவேண்டும் என கடந்த பெப்ரவரியில் பதினைந்து மனித உரிமை அமைப்புகள் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் ஆதரவு வழங்கவேண்டும் என அக் கடிதத்தில் மேலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுபொது நலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு இது தொடர்பான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 1993 பெப்ரவரியில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நாற்பத்தொன்பதாவது கூட்டத்தொடரில் பஸ் கிரீஸ்ரி இன்டநெசனல் மக்களின் உரிமைக்கும், விடுதலைக்குமான சர்வதேச மத்திய ஐரோப்பிய ரயர்மோல்ட் நிலையம், சர்வதேச கல்வி அபிவிருத்தி சகல விதமான இன ஒடுக்கு முறைகளையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்து தாக்கியதில் இருபோராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் அத்தியடிவெட்டை என்ற இடத்தில் கடந்த 21-ம் திகதி காலை 6-50 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரு விடுதலைப்புலிகள் போராளிகளும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

லெப். சுதாகர் (சீனித்தம்பி ரவிச்சந்திரன், நாசிவன் தீவு, வாழைச்சேனை) 2 ம் லெப். சிறிரஞ்சன் ஜெயசீலன் (ஆறுமுகம் கணேசமூர்த்தி காரைதீவு-03) ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தபோராளிகள் ஆவர்.



லெப். சுதாகர்



2-ம் லெப். சிறிரஞ்சன்

## எல்லோரும் ஜெனரல்களாக மாறமுற்படக்கூடாது

### சந்திரா பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

''இராணுவநடவடிக்கையை இராணுவமே நடத்த வேண்டும். நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எல்லோரும் ஜெனரல்களாக மாறவோ படையினரின் உற்சாகத்தைக் குறைக்கவோ முற்படக்கூடாது'' என எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

கிளாலியில் விடுதலைப் புலிகளின் படகு நடமாட்டம் குறைந்துள்ளது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் கிளாலி கடல் நீரேரியில் விடுதலைப் புலிகளின் படகு நடமாட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

''விடுதலைப் புலிகள் இந்த மார்க்கத்தை பயன்படுத்துவதைக் குறைக்கவே யாழ்தேவி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிளாலிப் பகுதியை கைப்பற்றி வைப்பது இராணுவத்தின் நோக்கமல்ல.

யாழ்தேவி நடவடிக்கையை

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## யாழ். பல்கலைக் கழக அனுமதி; இறுதி முடிவு இன்னுமில்லை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தின் 1991/92 ஆம் கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தொடர்பாக இதுவரை இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

மேற்படி கல்வி ஆண்டுக்கான அனுமதிக்குத் தகுதியானவர்களது பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதையும் இது தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாமதப்படுத்தி வருகிறது.

இதே கல்வி ஆண்டுக்கு ஏனைய பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்களது பெயர்ப் பட்டியல் ஏற்கனவே பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் இறுதி முடிவு எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் மாணவர்களது அனுமதி தொடர்பான ஏனைய நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படவிருக்கும் மாணவர்களது பட்டியல் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படாமல் தாமதிக்கப்படுவதன் காரணம் பற்றிய சரியான தகவலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும் மேற்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கணனியின் பெறுமதி 80 ஆயிரம் திருத்தம் செய்ய 2 லட்சம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான கணனி ஒன்றுக்கு ஏற்பட்ட கோளாறைத் திருத்திக்கொள்வதற்கு அந்த நிறுவனம் சுமார் இரண்டு லட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபாவைச் செலவு செய்துள்ளது.

இக் கணனிக்கு கோளாறு ஏற்பட்டதும் அந்தக் கணனி பொதிசெய்யப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது. கொழும்பில் உள்ள ''ஈஸ்ட் வெஸ்ட்'' என்ற நிறுவனத்துடன் கணனி திருத்தவேலை தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய மேற்படி கணனி அந்த நிறுவனத்திடம் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டது இத் திருத்தவேலை தொடர்பான ஒப்பந்தத்தில் மேற்படி கல்வி நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவரும் பரஸ்பரம் கையொப்பமிட்டுள்ள

( 4 ஆம் பக்கம் பார்க்க)

**தங்கையே!**

தங்கி நில்லாதே
தாவணிக் கனவுகளுக்குள்
வா மகளே! போராடு
விலங்குகள் யாவும் நொருங்கட்டும்.

## வரி விளம்பரம்

**புலமைப் பரிசில் பயிற்சி**

வெளிவந்து விட்டது! ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பரிசில் நவீன பயிற்சி நூல். 20 நவீன கட்டுரைகளையும் கணித, தமிழ்ப் புதிர்களையும் 10 மாதிரி வினாத் தாள்களையும் விடைகளுடன் கொண்டது. கிடைக்குமிடம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி7773)

**வகுப்புகள்**

ஓவிய, சிற்ப நுண்கலை வகுப்புகள் ஆரம்பமாகின்றன. மாணவருக்கும் ஏனையோருக்கும் வெவ்வேறு பிரிவுகள். இல. 6: பென்த கொஸ்தே வீதி, கச்சேரியடி. (6357)

**நீமா ரொக்ஸ் – நுளம்பு விரட்டி**

குப்பி விளக்கில் விட்டுஎரிக்க ஒளிதரும் விளக்காகவும், விளக்கிலிருந்து கிளம்பும் புகை நுளம்பு விரட்டியாகவும் பயன் தருகிறது. சூழல் மாசுபடாது. பக்க விளைவுகள் இல்லை. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. போத்தல் ரூபா 90/- டசின் போத்தல் கொண்ட பெட்டி ரூ. 960/- ஒரு மில்க்வைற் தயாரிப்பு. ''மில்க்வைற்'' (சி-7766)

**"கொழும்பில் கல்யாணம்"**

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- (6210)

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

உளவியலும், நவீன கற்பித்தலியலும். ஆக்கம்கலாநிதி சபா. ஜெயராசா வெளியீடு பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல். ஆக்கம், பேராசிரியர் கா. சிவத்தம்பி

---

ஓர் வரப்பிரசாதம்!

**நெல்லியடியில்**

# தமிழிசை

[வர்த்தக விளம்பர ஒலிபரப்புச் சேவை]

"தமிழிசையே தரணியிலே
முதல் இசையே"

- விளம்பரங்கள்
- பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- மரண அறிவித்தல்கள்
- விசேட அறிவித்தல்கள்

குறைந்த கட்டணத்துடன் ஒலிபரப்பப்படும்


குறிப்பு: மேற்படி நிறுவனத்திற்கு அறிவிப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் சுய விபரங்களோடு நேரில் வரவும்.

நிர்வாக மேலாளர்
"தமிழிசை"
பிரதான வீதி, நெல்லியடி. (6375)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 — 11 — 1926



ஆண்டவன் அடியில் 05 — 11 — 1992

அமரர்

**வேலுப்பிள்ளை நாகமணி**

[ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி]

திதி:- 25- 10- 93


நல்லைக்கந்தன் அருகில் நற்பணி பல நல்கி
இ.போ.சவில் சாரதியாய் சேவை புரிந்து ஆறு
முகனருகில் ஆறு மைந்தரையும்
தவப்புதல்வியையும் பெற்று பேரும் புகழும் பெற
வாழவைத்த உத்தமர்
இறைவனடி சேர்ந்து முதலாவது ஆண்டை
நினைவில் நல்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்

449, இராமலிங்கம் றோட்,
நல்லூர். [6374]

---

## 8-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 1958.11.25

வீரச்சாவு: 1985.10.25

**2-ம் லெப். ஜீவன் (குதிரைவீரன்)**

(தம்பிஜயா இரத்தினசாமி)

வெற்றிலைக்கேணி, முள்ளியான்

எங்கள் தமிழீழமதை சிங்களவன் ஆண்டிடவோ?
இனியதமிழ் மொழிகளெல்லாம் சிங்களத்தால்
அழிந்திடவோ?
நம்முன்னோர்கள் ஆண்டகதைநாம் இங்குமறந்திடவோ!
எனநீபுலிவீரனாய் ஆகிவிட்டாய்பிரபாவின் பாசறையில்.

வெற்றிலைக் கேணி மண்ணில் விழுதொன்று
தோன்றியதோ,
விடியலை நோக்கியது வீரவேங்கையானதுவோ,
சிங்களக் குடியேற்றமதைத் தகர்த்திடவோ வன்னி
மண்ணில்
தன்னுயிரைத் துச்சமெனக் காட்டி நின்றான் சிங்களப்
பாசறையில்.

கொக்கிளாய் முகாம் தகர்ப்பில் சகலகலாவல்லவன்
நீயுமன்றோ
எடுத்தஅடி கொடுத்துநின்ற வீரவேங்கை ஜீவனன்றோ
நெடுமாறன் தன்னைகடல்வழிவழிஅனுப்பிவந்தநீயு
மன்றோ
கடல்புலி வீரனென என்பதனைக் காட்டிநின்றாய்.

உன்வீரம் ஒன்றல்ல இரண்டல்ல நாம் இங்கு
உரைத்திடவோ
நீவளர்த்த தோழரவர் உன்புகழ் கூறிடுவர்
நீஉதிர்ந்த மலர்ஆகிடும்நாள்கிட்டவெனஎண்ணினரோ
நீ வளர்த்த நாய்குதிரைகூட கண்ணீர்மல்கநின்றதுவோ

குதிரை வீரன் என்ற சொல்லும் ஜீவனவன் நீயுமன்றோ-நீ
குறிவைத்தால் சிங்கள அராஜகந்தனை நம் மண்ணில்
வீழுமன்றோ
தோழர்தம் குழாமோடுநிராயுதபாணியாய்சென்றவேளை
பதுங்கியிருந்து தாக்கினனே சிங்கள அராஜகமும்...

உனது உடல் துவண்டதுவோ வன்னிமண்மேனி தன்னில்
வன்னி மண் தோய்ந்ததுவோ உனது இரத்தமதில்
வன்னி மக்கள் கண்ணீர் வெள்ளமதில் உனதுவிழி
மூடியதோ
உனது உடல் துவண்டதுவோ எம் ஜீவனே.

இவருடன் உதிர்ந்த ஏனையபோராளிகளானலோறன்ஸ் சபா, லலித் அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

ஜீவன் குடும்பத்தினர்

(6371)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

---

## 6-ம் திங்கள் நினைவஞ்சலி

மலர்வு  உதிர்வு

02-11-1976 31-05-1993

செல்வன்

**சண்முகநாதன் கிரிதரன்**

[கிரி]

ஆறு திங்கள் ஆனதையா
ஆறவில்லை எம் துயர்
ஆற்றுவார் யாருமின்றி
அலைகின்றோம் நாம்
வெள்ளை உடையணிந்து
வெண்முத்து பற்றெரிய
பள்ளிப் பையனாய் உலவிருந்தாய் - கிரிதரா
பாதி வழியில் எங்கே போனாய்

கலையில் நாட்டம் கொண்டு
கலைப்பிரிவில் சேர்ந்தாயோ?
நிலையில்லா வாழ்வென்று
இறைவனடி சேர்ந்தாயோ!
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் - கிரிதரா
நினைவினில் உன் முகம் நிலைத்திருக்கும்.

யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி
1995ஆம் ஆண்டு கலைப்பிரிவு
மாணவ, மாணவிகள்.

மட்டுவில் தெற்கு.
[6368]

---

## நினைவு கூருகின்றோம்:..
## 1993- 10- 25

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - ஓமந்தை, கொச்சுவெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**கப்டன் லோறன்ஸ்** (மருதலிங்கம் சிவலிங்கம் - கொக்குத்தொடுவாய் மணலாறு)

**லெப் சபா** (கந்தையா சிவமூர்த்தி -கொக்குத்தொடுவாய், மணலாறு)

**2 ம்லெப் லலித்** (நடேசு ராஜேந்திரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

**2-ம்லெப் ஜீவன்/குதிரைவீரன்** (தம்பிஐயா இரத்தினசாமி- வெற்றிலைக்கேணி, யாழ்.)

1987ஆம் ஆண்டு யாழ். கரவெட்டிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கமல்** [செல்லக்குட்டி இளங்கோ-குமுழமுனை, மணலாறு[

கேரதீவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள், சாவகச்சேரி பொதுச்சந்தை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம்மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட கவசவாகனத்தாக்குதலின்போது கொல்லப்பட்ட ஏழாலை வாசிகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், 2 பெண் பிள்ளைகள், 2 ஆண் பிள்ளைகள், பெறாமகன் உட்பட 6 தமிழர்கள் இதேசம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் 36 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு வவுனியாவில் பிராந்திய சுகா

## "கொழும்பில் கல்யாணம்"

இந்து மகளிர் கல்லூரி பொன்விழாவில் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/-
(6210)

---

## பூபாலசிங்கம் புத்தகசாலை

உளவியலும், நவீன கற்பித்தலியலும். ஆக்கம் கலாநிதி சபா. ஜெயராசா வெளியீடு பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல். ஆக்கம், பேராசிரியர் கா. சிவத்தம்பி விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை,
(சி-7732)

---

## உணவுச்சாலைகளுக்கு அதிகாரிகள் திடீர் விஜயம்

(பருத்தித்துறை)

புலோலிப்பகுதியில் உள்ள தேநீர்க்கடைகள் உணவுச்சாலைகள், பேக்கரிகளின் சுகாதாரநிலைகளைக் கண்காணிப்பதற்கென யாழ் மாவட்ட சுகாதாரதிணைக்கள உணவு, மருந்துவகைகள் பரிசோதகர் திரு. ச. மகாதேவா, பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர். திரு. ச. செவ்வந்திநாதர் ஆகியோர் அடங்கிய திடீர் பரிசோதனைக்குழு சோதனைகளை நடத்தியது.

இந் நடவடிக்கையின் போது சுகாதாரத்தை மீறும் வகையில் விற்பனை செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. சில தேநீர்க் கடைகள், உணவுச்சாலைகளை மூடுமாறு உத்தரவிட்ட திடீர்ப்பரிசோதனைக்குழு திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னரே கடைகள் திறக்கப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. சில தேநீர்க் கடை உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.
(25)

## கழகங்கள் பதிவு

வலைபந்தாட்டம் ஆடுவதில் ஆர்வமுள்ள கழகங்கள் அனைத்தும் தங்களை வலைபந்தாட்ட சங்கத்தின்கீழ் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இதுவரை பதிவுசெய்து கொள்ளாத கழகங்கள் அவ் அவ் வட்ட விளையாட்டுப் பொறுப்பாளர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றது.

---



1926 — 1992

அமரர்

## வேலுப்பிள்ளை நாகமணி

[ஒய்வுபெற்ற இ. போ. ச. சாரதி]

திதி:- 25-10-93

நல்லைக்கந்தன் அருகில் நற்பணி பல நல்கி
இ.போ.சவில் சாரதியாய் சேவை புரிந்து ஆறு
முகனருகில் ஆறு மைந்தரையும்
தவப்புதல்வியையும் பெற்று பேரும் புகழும் பெற
வாழவைத்த உத்தமர்
இறைவனடி சேர்ந்து முதலாவது ஆண்டை
நினைவில் நல்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்

449, இராமலிங்கம் றோட்,
நல்லூர்.


[6374]

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
25. 11. 1958

வீரச்சாவு
25. 10. 1985



### 2-ம் லெப்: ஜீவன்

[தம்பிஐயா இரத்தினசாமி]

தூரம் ஒருவர் துணிந்து புலியாகின்ற
ஆரம்ப காலம் ஓங்குபுகழ் ஹாட்லியின்
ஆற்றல்மிகு கல்வி ஆர்வத்துடன் புலியானான்
ஏற்றபல யுத்த எழிற்பயிற்சி கொண்டவனாய்

எண்பத்து மூன்றில் இணைந்தான் புலியணியில்
பண்பட்ட குடும்பத்தின் பாசமகன் கடைக்குட்டி
இரத்தினசாமிப் புதல்வன் எடுப்பான் தமிழ்மறவன்
இரக்கசிந்தை நண்பர்க்கு இனிக்கின் அன்புநெஞ்சன்

கொக்கிளாய் புக்கெதிரி கூட்டம்பல நூறாக
உக்கிரமாய்த் தாக்கி உயர்த்திட்டான் புலிக்கொடியை
வன்னிக்காட்டில் வரிப்புலிகள் அணிக்கெல்லாம்
மின்னலடி கொமாண்டோ மிளிர்பயிற்சி வழங்கியவன்

ஓமந்தைக் காட்டில் உடல்கூடக் கிடைக்காமல்
நாமுன்னை இழக்க நடந்தபழி மறப்போமோ?
உனது இலட்சியப் பாதையில் வந்திட்ட
வீரவேங்கை பாலச்சந்தரும் உன்னுடன் சேர்ந்திட்டான்

ஆம்! என்றைக்கென்றாலும் மாமன் இலட்சியத்தை பூமியிலே நாட்டி அவன் புலிக்கொடியே ஆளவைப்போம்.

★ இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களையும் இன்று நினைவு கூருகின்றோம்.

அக்கா குடும்பம்

மதவடி,
வல்வெட்டித்துறை.

[6376]

---

நீ வளர்த்த நாய்குதிரைகூட கண்ணீர்மல்கநின்றதுவோ

குதிரை வீரன் என்ற சொல்லும் ஜீவனவன்நீயுமன்றோ-நீ
குறிவைத்தால் சிங்கள அராஜகந்தனை நம் மண்ணில்
வீழுமன்றோ
தோழர்தம் குழாமோடுநிராயுதபாணியாய்சென்றவேளை
பதுங்கியிருந்து தாக்கினனே சிங்கள அராஜகமும்...

உனது உடல் துவண்டதுவோ வன்னிமண்மேனி தன்னில்
வன்னி மண் தோய்ந்ததுவோ உனது இரத்தமதில்
வன்னி மக்கள் கண்ணீர் வெள்ளமதில் உனதுவிழி
மூடியதோ
உனது உடல் துவண்டதுவோ எம் ஜீவனே.

இவருடன் உதிர்ந்த ஏனையபோராளிகளானலோறன்ஸ் சபா, லலித் அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

ஜீவன் குடும்பத்தினர்

(6371)

---

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வி

### கதிரமலை ஜெயந்தி (தங்கா)

திருமலை மண்ணில் — 13-11-1968

கிளாலிக் கடலில் — 28-07-1993

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
குடும்பத்தின் ஒளிவிளக்கே எமதினிய''தங்காவே''
உன் அப்பாவையும் அண்ணாவையும் அழித்த
கொடியவரின் கோரக்குண்டு உனக்கு எமனாக
வந்ததுவோ?
மாதங்கள் மூன்றென்ன ஆண்டுகள் பல சென்றாலும்
உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது

கிளாலிக்கடலில் அகாலமரணமெய்திய எமதுமகளின் 90ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் 25-10-93 இன்று அச்சுவேலியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரின் குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி.

(6370)

---

லெப் சபா (... மணலாறு)

2 ம்லெப் லலித் (நடேசு ராஜேந்திரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

2-ம்லெப் ஜீவன்/குதிரைவீரன் (தம்பிஐயா இரத்தினசாமி- வெற்றிலைக்கேணி, யாழ்.)

1987ஆம் ஆண்டு யாழ். கரவெட்டிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கமல் [செல்லக்குட்டி இளங்கோ-குமுழமுனை, மணலாறு[

கேரதீவில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள், சாவகச்சேரி பொதுச்சந்தை மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாம்மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட கவசவாகனத்தாக்குதலின்போது கொல்லப்பட்ட ஏழாலை வாசிகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், 2 பெண் பிள்ளைகள், 2 ஆண் பிள்ளைகள், பெறாமகன் உட்பட 6 தமிழர்கள் இதேசம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் 36 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு வவுனியாவில் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனையில் தங்கியிருந்த போது இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகிய 2 தமிழர்கள்.

யாழ். மருத்துவமனை வீதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சங்கானையைச் சேர்ந்த தனியார் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞான ஆசிரியர்.

யாழ். மல்லாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வர்த்தகசங்கத் தலைவரும், நாட்டுப் பற்றாளருமான

சிவசிதம்பரப்பிள்ளை சிவதாசபிள்ளை [திசன் வீதி, மல்லாகம், யாழ்]

1989ஆம் ஆண்டு அம்பாறையில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நிந்தவூரைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

திலீப் (அப்புக்குட்டி வரதன்-ஊரெழு வடக்கு, சுன்னாகம்)

வெற்றி (சோமசுந்தரம் சுபாகரன் - ஐயனார் கோவிலடி, சுழிபுரம் மேற்கு - யாழ்)

சேரன் (பெருமாள் நாகேந்திரம்-44/1, இன்பம் வீதி, யாழ்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

மகான் (இராசதுரை சுதாகரன் - பூதர்மடத்தடி, கோப்பாய் வடக்கு, யாழ்)

மட்டு-பெரியகுளம் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு-மண்முனை சோலைப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ராம்கி (கி மோகன்ராஜ் - பிள்ளையாரடி, மட்டு)

நவநாதன் (த. மகேந்திரன் - கொத்தியாவளை, மட்டு)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வைத்தியமனையில் வீரச்சாவெய்திய -

லெப். சித்தார்த்தன் (சிறிகந்தராசா சிறீதரன் - 3/3, திருவையாறு - கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு யாழ். வைத்திசாலையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த

2-ம்லெப் யோகவதி (ஜெயராஜா யூடிற்றஜனி - கரவெட்டி, மேற்கு - யாழ்.)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7777)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

சாம்ராஜ்யத்தின் செங்கோல் வளைந்து கோணலாகவே இருக்கும்

- பிரான்சிஸ் பேக்கன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த பெ. எண் - 05


## தார்மீகக் கடமை

இலங்கையில் இன்று இடம் பெற்றுவரும் இன மோதலுக்கு இலங்கையை சுமார்400 வருடங்களாக ஆண்ட ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியாளரின் நடவடிக்கைகள் கணிசமான பங்கை ஆற்றியுள்ளன. இதிலும், பிரித்தானியரின் நிர்வாகமே இலங்கையில் இன்றைய நிலை இவ்வாறான மோசமான கட்டத்தை அடைவதற்குக் காரணமாகும்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் னகப்பற்றிய பிரித்தானியர், இலங்கையில் எஞ்சியிருந்த கண்டிராச்சியத்தை 1815இல் கைப்பற்றியதோடு, பிரச்சினை ஆரம்பமாகியதெனலாம். ஏனெனில், அதைத் தொடர்ந்தே இலங்கை பூராவும் ஒரு நிர்வாக அமைப்பிற்குள் கொண்டுவர பிரிட்டன் முடிவெடுத்தது. இதைத் தொடர்ந்தே தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு பகுதியும் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது.

ஆனால், தமது நிர்வாக வசதிக்காக சிறிலங்காவையும், தமிழர் தாயகத்தையும் ஒன்றாக இணைத்த பிரித்தானிய குடியேற்றவாதிகள் தமது நலனைப் பேணும் நோக்கில் தமிழர்களையும் - சிங்களவர்களையும் பிரித்து வைத்து வந்ததோடு, இருதரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதிலேயே கருத்தாகச் செயற்பட்டனர். இதேவேளை, தமிழர்களை நிர்வாகத்திற்கு உதவியாகப் பெருமளவில் சேர்த்துக் கொண்ட போதும், சிங்கள அரசியற் தலைவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே நடந்து கொண்டனர். அதாவது, பெரும்பான்மை இனத்தின் ஆதரவு காணப்படும் வரைக்குமே தாம் குடியேற்ற நாடுகளை ஆளலாம் என்பதை பிரித்தானியர்கள்அறிந்திருந்தனர். இதன் அடிப்படையில் பிரித்தானியா தமிழர்களை ஏமாற்றியது. நம்பிக்கை துரோகம் செய்தது.

இதன் காரணமாக, இலங்கையில் பெரும்பான்மையினர் என்ற ரீதியில், சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை ஆளவும், தமிழர் தாயகத்தையும் ஆக்கிரமிக்கும் நிலையும் உருவாகியது. அதாவது 'ஜனநாயகம்' என்ற பெயரில் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரம் இலங்கையில் உருவாகியது. சிறுபான்மை இனம் பெரும் துயர்களைச் சந்திக்கவேண்டி வந்தது

### பல்கலை அனுமதியில் மாணவர் பாதிப்பு

# சிறிலங்கா அரசுடன் "குவேக்கர்ஸ்" குழு பேசும்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நடைமுறையினால் வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் குறித்து ''குவேக்கர்ஸ்'' சமாதானக் குழுவினர் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த ''குவேக்கர்ஸ்'' சமாதானக் குழுவின் அதிகாரிகள் நேற்று இங்கிருந்து கொழும்பு திரும்பினர்

கொழும்பு சென்றதும் மேற்படி வடக்கு-கிழக்கு தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் குறித்து சிறிலங்கா அரசின் உயர் அதிகாரிகளுடனும், உயர் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளனர்.

மானியக்குழுவின் பாரபட்சம் காரணமாக நூற்றுக்கணக்கான மாணவர்கள்தமது உயர்கல்வியை இழக்கும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இவ்வாறானசம்பவங்கள் நாட்டில் அமைதியின்மையை உருவாக்கும் என்பதை இக் குழுவினர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளனர். (க) (நி)

## படை தளபதிகளை கொல்ல தற்கொலை படையணி

### கொழும்பு புலனாய்வு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முப்படை தளபதிகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட ஏழு பேரை கொலை செய்வதற்கே விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையணி கொழும்பு சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுப்பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

அண்மையில் கொழும்பு முகத்துவாரப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலைப் படையினரின் அங்கி தொடர்பாக கைது செய்யப்பட்ட 15 பேரின் வாக்கு மூலங்களிலிருந்து இது தெரியவந்துள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்,

இவ் ஏழுபேரில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர், சிங்களப்பாதுகாப்புச்சங்கதலைவர் ஆகியோரும் அடங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வன்னேரிக்குளத்தில் புது வகை மீனினம்

வன்னேரிக்குளத்தில் இதுவரை கிடைக்கப் பெறாத ''கோல்டன் காவ்'' உட்பட புதிய இனமீன்கள் தமிழிழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முயற்சியால் அங்கு கொண்டு வந்து விடப்பட்டன.

வன்னேரிக்குளத்தில் இதுவரை காலமும் ஜப்பான் (திலாப்பியா) மசறி போன்ற மீன்கள் மட்டுமே விடப்பட்டிருந்தன. இப்பகுதி மீனவர்கள் பருவகால மீன்பிடியாக இங்கு மீன் பிடி மேற்கொள்வது வழக்கமாயிருந்து வருகிறது இதனால்இவர்கள் படகுகளை இதில் ஈடுபடுத்துவதில்லை கால் நடையாகச் சென்று தமது வலைகளைப்போடுவது வழக்கம்.

விஷமுள்ள முட்களைக் கொண்டுள்ளமசறி மீன்களால் இவர்கள் தாக்கப்படும் போது நீண்ட நாட்கள் பாதிக்கப்படுவது வழக்கமாக நடைபெறும் சம்பவங்கள். இக்குறைபாடுகளை தமிழிழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துறை சார்ந்தவர்களுடன் ஆராய்ந்தது.

கோல்டன் காவ் போன்ற சுவையான மாற்று இன மீன்களை அங்கு விடுவதால் பல்லினங்களை வளர்ப்பதோடு இவற்றின் உணவுப்பழக்கம் காரணமாக மசறி போன்ற தீங்கு விளைவிக்கும்மீன்களின் பெருக்கம் கட்டுப்படுத்தலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள வன்னேரிக்குள கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களும் மீன்பிடியாளர்களும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் அக்கராயன் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.

## கொழும்பு புறக்கோட்டையில் கொள்ளையர் கைவரிசை

கொழும்பு புறக்கோட்டை சென் செபஸ்தியான் கில்லிலுள்ள வெளிநாட்டு பார்சல்கள்அலுவலகத்திற்குள்திங்கள் இரவு புகுந்த கொள்ளையர்கள் இரும்புப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து அறுபத்தொன்பதாயிரம் ரூபா ரொக்கப்பணத்தைகொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் போலி துவக்கைப் பயன்படுத்தி இரும்புப் பெட்டியைத் திறந்து இப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

மூன்று பாதுகாப்பு வீரர் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை கொள்ளையர்கள் அலுவலகத்தில் எவ்வாறு புகுந்தனர் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

இக் கொள்ளைசம்பந்தமாக பத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் விசாரிக்கப்பட்டனர்.

### வடமராட்சிப் பகுதிகளில்

## இராணுவ அட்டூழிய ஓவியக் காட்சிகள்

(வடமராட்சி)

சிறிலங்கா அரச படைகளால் தமிழீழமக்கள் மீது கட்

உள்ளாக்கிவி டுசெல்வதையும் வயல் அறுவடையானநெ

## அநுரா மட்டுமல்ல நாமும்வவுனியா சென்றோம்

### கட்சி பொதுச் செயலர் தர்மசிறி

[கொழும்பு]

அநுரா பண்டார நாயக்கா 1988 இல் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தனது பாதுகாப்பையும் பொருட்படுத்தாது வவுனியா காட்டுக்குள் தான் பிரவேசித்ததாக கூறியிருக்கின்றார். இது உண்மையாயினும் கட்சியின் உதவிச் செயலாளர் என்ற வகையில் நானும் அநுருத்த ரத்வத்த உட்பட வேறு பலரும் அநுராபண்டாரநாயக்காவுடன் வவுனியாவிற்கு சென்றிருந்தோம் என்பதை மறந்து விடக்கூடாது இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிறிலங்காசுதந்திரக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்த அநுரா வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக தர்மசிறி சேனநாயக்கா விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சி கட்டுப்பாட்டை மீறியமைக்காகமுன்பும்ஒருதடவை அநுரா கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் மீது தயவு காட்டி கட்சித் தலைவியும் மத்திய குழுவும் அவரை மீண்டும் உறுப்பினராக சேர்த்துக் கொண்டனர். அத்துடன் கட்சியின் உயர் மட்டத்தில் தன்னை அவர் ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பாக உதவித் தலைவராகவும் தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார் தன்னைமேம்படுத்திக்கொள்ள வழங்கப்பட்ட இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள அநுரா தவறிவிட்டமை கவலைக்குரியதே. அவர் தன் மீது கட்சி காட்டிய அக்கறைகளை கட்சியினதும் தலைமைத்துவத்தினதும் பலவீனத்தின்அடையாளங்களாக கருத முற்பட்டிருக்கின்றார்.

1989 பாராளுமன்ற தேர்தல்களின் போது தான்கலந்து கொண்ட கூட்டங்கள் பலவற்றின் போது குண்டுகள் வீசப்பட்டதாகவும் துப்பாக்கிப்பிரயோகம்செய்யப்பட்டதாகவும் அநுரா கூறியிருக்கின்றார். அவரது தாயாரும் கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்கிய கூட்டங்களிலும் குண்டு வீசப்பட்டதையும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதையும்நினைவுபடுத்தவிரும்புகின்றோம். அநுரா கட்சியில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட தினத்தன்று இரவு நான் கொழும்பில் வசிக்கும் வீடு மீதும் கைக்குண்டு வீசப்பட்டதை அநுரா மறந்து விட்டார் போலும் என்றும் தர்மசிறி சேனநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

## ஓசை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் - வைத்தீஸ்வராக் கல்லூரியில் இயங்கிவரும் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தினால் 'ஓசை' எனும் கையெழுத்துப்பிரதி வெளியிடப்பட்டுள்ளது. (22)

## விடுவிக்கப்பட்ட மீனவர் கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

இந்திய கடல் எல்லையினுள் பிரவேசித்தமைக்காக ஒருமாதத்திற்குமுன் இந்திய கடற்படையால் கைதான 29 சிங்கள மீனவர்களும் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர். இந்த 29 மீனவர்களும், 5 படகுகளும் கடந்த செவ்வாய் இந்தியாவினால் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே.

வெளிவிவகார செயலர் பெர்னாட் திலகரட்ன டில்லியில் நடைபெற்ற பேச்சுகளில் இவர்களின் விடுதலை குறித்து பிரஸ்தாபித்ததை அடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்தியாவின் மேற்கேயுள்ள லட்சதீவுகளுக்கு அருகில்நின்ற இவர்களை உளவுபார்த்ததாகக் கூறி இந்தியக் கடற்படை கைது செய்தது.

நாடுதிரும்பிய இம் மீனவர்களை பொதுநிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, கடற்தொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

## வட அயர்லாந்தில் குண்டு வெடிப்பு 9பேர் பலி: 50பேர் காயம்

வையும், தமிழர் தாயகத்தையும் ஒன்றாக இணைத்த பிரித்தானிய குடியேற்றவாதிகள் தமது நலனைப் பேணும் நோக்கில் தமிழர்களையும் - சிங்களவர்களையும் பிரித்து வைத்து வந்ததோடு, இருதரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகளையும் தோற்றுவிப்பதிலேயே கருத்தாகச் செயற்பட்டனர். இதேவேளை, தமிழர்களை நிர்வாகத்திற்கு உதவியாகப் பெருமளவில் சேர்த்துக் கொண்ட போதும், சிங்கள அரசியற் தலைவர்களைத் திருப்திப் படுத்தும் நோக்கிலேயே நடந்து கொண்டனர். அதாவது, பெரும்பான்மை இனத்தின் ஆதரவு காணப்படும் வரைக்குமே தாம் குடியேற்ற நாடுகளை ஆளலாம் என்பதை பிரித்தானியர்கள்அறிந்திருந்தனர். இதன் அடிப்படையில் பிரித்தானியா தமிழர்களை ஏமாற்றியது. நம்பிக்கை துரோகம் செய்தது.

இதன் காரணமாக, இலங்கையில் பெரும்பான்மையினர் என்ற ரீதியில், சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை ஆளவும், தமிழர் தாயகத்தையும் ஆக்கிரமிக்கும் நிலையும் உருவாகியது. அதாவது 'ஜனநாயகம்' என்ற பெயரில் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரம் இலங்கையில் உருவாகியது. சிறுபான்மை இனம் பெரும் துயர்களைச் சந்திக்கவேண்டி வந்தது.

இதேவேளை, பிரித்தானியா நிறுவிய சிறிய நாடுகளாக இருப்பினும் சரி, பெரிய நாடுகளாக இருப்பினும் சரி அந்நாடுகளில் இன்று நிலவும் முக்கிய பிரச்சினைகளுக்கு குடியேற்றவாத ஆட்சியே காரணமாகும். அதாவது, பெரிய இந்தியாவில் காஷ்மீரிலும், சிறிய இலங்கைத்தீவில் தமிழர் தாயகத்திலும் சிந்தப்படும் இரத்தத்திற்கு பிரித்தானியாவே காரணமாகும். இவைதவிர பிரிட்டன் ஆட்சி செய்த ஏனைய கொமன் வெல்த் நாடுகளிலும் இந்நிலை காணப்படுகின்றது

மேலும் பிரிட்டன் குடியேற்ற நாடுகளை விட்டு வெளியேறிவிட்ட பின்பும், இப்பிரச்சினைகளில் தமது கவனத்தைச் செலுத்தவில்லை மாறாக தாம் ஆட்சியை ஒப்படைத்து வந்த பெரும்பான்மையினரின் நலனைப் பேணும் நடவடிக்கையிலேயே இறங்கின. அவ் அரசுகளுக்கு பெருமளவு நிதியையும், ஆயுதத் தளபாடங்களையும் பிரிட்டன் உதவியது இவ் உதவிகள் சிறுபான்மை. இனங்களுக்குச் சென்றடையவில்லை மாறாக, சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்கவே பயன்பட்டன.

இந்தநிலையில் தான், தற்பொழுது 'கொமன் வெல்த்' பொதுநலவாய நாடுகள் - அமைப்பிடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 'கொமன் வெல்த்' அமைப்பானது பிரிட்டிஷ் மகாராணியைத் தலைவராகக் கொண்டதாகும். அத்தோடு, பிரிட்டனின் குடியேற்ற நாடுகளே அதன் அங்கத்துவ நாடுகளும் ஆகும். இந்நிலையில் கொமன் வெல்த் அமைப்பிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டமை நியாயமானதொன்றே. அதிலும், சிறிய நாடுகளின் பிரச்சினைகளை ஆராய சைபிரசில் கொமன் வெல்த் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் கூடியுள்ள வேளையில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை பொருத்தப்பாடானதே.

இந்நிலையில், விடுதலைப்புலிகள் கொமன்வெல்த்திடம் விடுத்துள்ள கோரிக்கை குறித்து பிரிட்டன் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டும். அதாவது, கடந்த காலத்தைப் போன்று பெரும்பான்மை இனங்களின் நலன்களுக்கேற்ப செயற்படுவதன் மூலம் தமது நலன்களைப் பேணிக் கொள்ளும் கொள்கையை சிறிதளவேனும் கைவிட்டு தமது கடந்த கால நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு முன்வரவேண்டும். ஏனெனில் தான் உருவாக்கிய பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டிய அவசியமும் தார்மீகக் கடமையும் பிரிட்டனுககு நிறையவே உண்டு.

## கொள்ளையர் கைவரிசை

கொழும்பு புறக்கோட்டை சென் செபஸ்தியான் கில்லிலுள்ள வெளிநாட்டு பார்சல்கள் அலுவலகத்திற்குள் திங்கள் இரவு புகுந்த கொள்ளையர்கள் இரும்புப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து அறுபத்தொன்பதாயிரம் ரூபா ரொக்கப்பணத்தைகொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் போலி துவக்கைப் பயன்படுத்தி இரும்புப் பெட்டியைத் திறந்து இப்பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

மூன்று பாதுகாப்பு வீரர்கள் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை கொள்ளையர்கள் அலுவலகத்தில் எவ்வாறு புகுந்தனர் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

இக் கொள்ளைசம்பந்தமாக பத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் விசாரிக்கப்பட்டனர்.

வடமராட்சிப் பகுதிகளில்

## இராணுவ அட்டூழிய ஓவியக் காட்சிகள்

(வடமராட்சி)

சிறிலங்கா அரச படைகளால் தமிழீழமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட ''இராணுவ அட்டூழியங்களை சித்திரிக்கும் ஓவியக்கண்காட்சி'' வடமராட்சிப் பகுதியில் மக்கள் கூடும் கேந்திர நிலையங்களில் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

தேசியத்தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் மக்கள் அணிதிரண்டு நிற்பதனையும் விறகு வியாபாரி ஷெல்பட்டு இறப்பதையும் கடலில் படகுகள் மூலம் பயணம் செய்யும் தமிழ் மக்களை கடற்படையினர் வெட்டியும் சுட்டும் கொலை செய்வதையும், வீதியில் மாவீரர் ஊர்வலங்கள் சென்று கொண்டிருக்கையில் சிலர் இரவில் வீடியோ திரைப் படம் பார்த்து ரசிப்பதையும், பாடசாலையை முற்றுகையிடும் இராணுவம் பிள்ளைகளை சுட்டுக் கொலைசெய்வதையும்தமிழ்இளைஞர்கள்உயிருடன் ரயர்போட்டுஎரிக்கப்படுவதைம்,ஆலயங்களில்தஞ்சமடைந்த அகதிகளை கைகட்டி வைத்து இராணுவம் துன்புறுத்துவதையும்கணவன் முன்னிலையில்மனைவியைஇராணுவம் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவிட்டுசெல்வதையும் வயல் அறுவடையானநெருடுகளுக்கு இராணுவம் தீவைத்து கொழுத்துவதையும், தமிழீழப் போருக்கு தனது கணவனைமனைவி திலகமிட்டு அனுப்புவதையும், மகளைதாய் வீரத்திலகமிட்டு அனுப்புவதையும் ஐரோப்பிய நாடுகளில் பிள்ளைகள் அகதி இங்கே பெற்றோர் அகதியாய் வாழ்வதையும் மற்றும் பல சித்திரப் பூக்களையும் இவ் ஓவியக்காட்சி மூலம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு வருகிறது. (யோ)

கொண்டுள்ளமசறி மீன்களால் இவர்கள் தாக்கப்படும் போது நீண்ட நாட்கள் பாதிக்கப்படுவது வழக்கமாக நடைபெறும் சம்பவங்கள். இக்குறைபாடுகளை தமிழிழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துறை சார்ந்தவர்களுடன் ஆராய்ந்தது.

கோல்டன் கால் போன்ற சுவையான மாற்று இன மீன்களை அங்கு விடுவதால் பல்லினங்களை வளர்ப்பதோடு இவற்றின் உணவுப்பழக்கம் காரணமாக மசறி போன்ற தீங்கு விளைவிக்கும் மீன்களின் பெருக்கம் கட்டுப்படுத்தலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள வன்னேரிக்குள கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களும் மீன் பிடியாளர்களும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் அக்கராயன் வட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தோமஸ் அவர்கள் முதலாவது சினைப்பட்டுள்ள மீனை வன்னேரிக்குளத்தில் விட்டு மேற்படி திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இப்பகுதியில் கடந்த வருடம் பிடிக்கப்பட்ட மீன்கள் சந்தை வாய்ப்பு இன்றி இருந்தால் அவற்றைத் தமிழிழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின் கடல்வள அபிவிருத்திப்பகுதி கொள்வனவு செய்து கால் நடைத்தீவன உற்பத்திக்குப் பயன்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மண்ணித்தலை நோக்கி பீரங்கிப் படகு தாக்குதல்

கடந்த வெள்ளி முன்னிரவு 11-30 மணியளவில் மண்டைதீவு கிழக்குக் கடற்பிரதேசத்திற்கு வந்து சேர்ந்த பீரங்கிப் படகில் இருந்து பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூடுதாக்குதல்கள்மேற் கொள்ளப்பட்டன. நேற்று முன்தினம் அதிகாலை 1 மணிக்வரை நீடித்ததாக்குதல் குறிப்பாக பூநகரி கல்முனை, ஒருகரை, மண்ணித்தலைப் பகுதிகளை இலக்குவைத்து நடத்தப்பட்டன.

கடற்பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு நின்றவர்கள் பீரங்கிப் படகின் வருகையை அடுத்து தொழில்களைக் கைவிட்டு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பு அகதிமுகாம்கள் விரைவில் மூடப்படும்

## அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்

கொழும்பிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ்க் குடும்பங்கள் விரைவில் அவர்களின் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இவ்வாறு 521 அகதி குடும்பங்கள் வெகு விரைவில் தமதுசொந்த இடங்களுக்கு திருப்பியனுப்பப்படவுள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள். 1992 முதல் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 12 அகதிமுகாம்கள் திறக்கப்பட்டன. ஏற்கனவே நான்கு அகதி முகாம்கள் மூடப்பட்டு அதில் தங்கியிருந்தவர்கள் அரசினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

வெள்ளவத்தை சரஸ்வதி மண்டப அகதி முகாமில் 147 தமிழ்க்குடும்பங்களும் கொழும்பில் உள்ள ஏனைய ஏழு முகாம்களில் 267 முஸ்லிம் குடும்பங்களும் தற்போது தங்கியிருப்பதாக சமூக சேவைள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விடுவிக்கப்பட்ட மீனவர் கொழும்பு வந்தனர்

(கொழும்பு)

இந்திய கடல் எல்லையினுள் பிரவேசித்தமைக்காக ஒருமாதத்திற்குமுன் இந்திய கடற்படையால் கைதான 29 சிங்கள மீனவர்களும் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர். இந்த 29 மீனவர்களும், 5 படகுகளும் கடந்த செவ்வாய் இந்தியாவினால் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே.

வெளிவிவகார செயலர் பெர்னாட் திலகரட்ன டில்லியில் நடைபெற்ற பேச்சுகளில் இவர்களின் விடுதலை குறித்து பிரஸ்தாபித்ததை அடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்தியாவின் மேற்கேயுள்ள லட்சதீவுகளுக்கு அருகில்நின்ற இவர்களை உளவுபார்த்ததாகக் கூறி இந்தியக் கடற்படை கைது செய்தது.

நாடுதிரும்பிய இம் மீனவர்களை பொதுநிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, கடற்தொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

## வட அயர்லாந்தில் குண்டு வெடிப்பு 9பேர் பலி; 50பேர் காயம்

(லண்டன்)

வட அயர்லாந்தில் பெல்பார்ஸ்ட் நகரில் இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்பில் ஒன்பது பேர்பலியாகினர் 50பேர் காயமடைந்தனர். மக்கள் நெரிசல்மிக்க வர்த்தகப் பகுதியில் குண்டு வெடித்தது, குண்டு வெடிப்பிற்கு ஐ. ஆர் ஏ. உரிமை கோரியுள்ளது.

தடை செய்யப்பட்ட புரட்டஸ்தாந்து மத இயக்கமான யூ. எப். எப்- பயன்படுத்தும் கட்டடம் குண்டினால் தகர்ந்தது- இடிபாட்டினுள் சிக்கியவர்கள் தொடர்ந்து மீட்கப்படுகின்றனர். நேற்று முன்தினம் பெல்பார்ஸ்ட் நகரில் கத்தோலிக்க குடும்பங்கள் மீது யூ. எப் எப் எனும் புரட்டஸ்தாந்து மத இயக்கம் தாக்குதல் நடத்தியமை, ரோமன் கத்தோலிக்க டாக்சி சாரதி இவ்வமைப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டமை ஆகியவற்றுக்கு பழிவாங்கவே இந்தப் புரட்டஸ்தாந்து இயக்கம் மீது ஐ. ஆர். ஏ குண்டு தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது.

## சிறுநாடுகள் பிரச்சினை கொமன்வெல்த் ஆராயும்

சிறிய நாடுகளின் பிரச்சினைகளை ஆராய பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்டக்குழு சைபிரசில் இன்று கூடுகின்றது. முதல் முறையாக இத்தகையதோர் கூட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் அடுத்த வருடம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை கண்காணிக்க பொதுநலவாய அமைப்பு இணக்கம் கண்டுள்ளது.

## கொமன்வெல்த்தலைமை இளவரசர் சாள்ஸ்சுக்கு?

(லண்டன்)

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் தமது மகன் இளவரசர் சாள்ஸ்சுக்கு அனுகூலமாக பொதுநல அமைப்பு (கொமன்வெல்த்) தலைமைப்பதவியிலிருந்து விலகிக்கொள்ள ஆராய்வதாக'தமெயில்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

காலக்கிரமத்தில் பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் அமர தயார் படுத்தும் வகையில்"இளவரசர் சாள்ஸ்சுக்கு அரசியல் யாப்பு ரீதியில் புதிய அந்தஸ்தை வழங்குவதில் மகாராணி ஆர்வம் கொண்டுள்ளதாகவும் த மெயில் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பூகம்பத்தால் பாதிப்படைந்த பகுதி உயர்வடைந்தது

(டில்லி)

இந்திய வரலாற்றில் இதுவரை காணாத அளவு மகாராஷ்டிரா மாநிலத்தில் அண்மையில் நிலநடுக்கத்தால் முற்றாக நாசமாகியுள்ள பகுதி திடீரென உயர்ந்திருப்பதாக நிலவியல் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

பூமியின் கீழ்உள்ள நில அடுக்குகள் இடம் மாறியதே இதற்கு காரணம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இப்பூமி நடுக்கத்தால் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பலியானது தெரிந்ததே.

ஈழநாதம்

# அ. தி. மு. க. உடன் உறவு; காங்கிரஸ் முயற்சிக்கவில்லை

## வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவிப்பு

(சென்னை)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உறவைப் புதுப்பித்துக்கொள்ள எந்த அளவிலும் முயற்சி செய்யவில்லை என்று இதன் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளரிடையே பேசிய அவர், தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று தம் தலைமையில் பிரதமரை சந்தித்ததாகவும் காவிரிநீர் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்ற தீர்ப்பின்படி காவிரியில் தண்ணீரை உடனடியாக விடுவிக்க கர்நாடக அரசை மத்திய அரசு வற்புறுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரினால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுத்து பிரதமர் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாம் கேட்டுக்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்திய இலங்கைக் கடற்படையினர் கூட்டாக இணைந்து செயற்படுவதன் மூலம் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க முடியும் என பிரதமர் கருதுவதாகவும் இப்பிரச்சினை தொடர்பாக அண்மையில் பிரதமர் இலங்கை உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மத்திய பிரதேச மாநிலத்தில் அருத்த மாதம் தேர்தல்

[டில்லி]

மத்திய பிரதேசத்தில் 320 சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் வேட்பாளர் மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி உள்ளன

இம்மாநிலத்தில் எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது உத்தரபிரதேசத்திலும் தேர்தல் வேட்பாளர் மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதேவேளை ஹிமாலய பிரதேசம், ராஜஸ்தான் டில்லி பகுதிகளில் தேர்தல் பிரசார வேலைகள் இடம்பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிற்போடப்பட்டது

வடமராட்சிக் கோட்ட மனைப் பொருளியல் வள நிலையத் திறப்புவிழாவும் கண்காட்சியும் திட்டமிட்டபடி 27-10 93, 28 10-93 ஆகிய திகதிகளில் நடைபெறமாட்டாது. பிற்போடப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

திருமதி யோ. கந்தசாமி
சே. ப. ஆ. ஆலோசகர்
மனைப்பொருளியல்

(சி/7776)

## 60-ம் நாள் நினைவஞ்சலி



## தமிழீழ பொ. க. தேர்வு விஞ்ஞானசெயன்முறைதேர்வு

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செயன்முறைத் தேர்வு வரும் நவம்பர் 6ஆம், 7ஆம், திகதிகளில் முன்னரே அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் நடைபெறுமெனவும், தேர்வாளருக்கான கருத்தரங்கு கல்விக் கோட்ட ரீதியாக பின்வரும் திகதிகளில் நடைபெறுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்;

யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டம்: 3 11-93 புதன்கிழமை மு. ப. 9-00 மணிக்கு யாழ்/யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம். மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்டம்: 3-11 93 புதன் கிழமை பி. ப 2 00 மணிக்கு யா / இராமநாதன் கல்லூரி மண்டபம். வடமராட்சிக் கல்விக்கோட்டம்: 4 11 93 வியாழக்கிழமை மு. ப. 9 மணிக்கு யா/மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரி மண்டபம். தென்மராட்சிக் கல்விக்கோட்டம்: 4 11 93 வியாழக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம்.

## யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையிலான உதை... மட்டுவில் மவி மைதானத்தில் சாவகச்சேரி இந்து அணியை எதிர்த்து ...

---

வாழ்வில்

மறுநாள் நாம் வல்லிபுரம் கோவிலுக்கு போவதற்கு முற்பட்டோம், ஏனெனில் எமக்கு விடுதலைப் புலிகள் கூறியிருந்தார்கள். எமக்கு எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் எமது மக்கள் தமது அன்றாட நடவடிக்கையைஎந்தவித தடையுமின்றி செய்துகொள்கின்றார்கள் என்று அதனை பார்க்க நாம் வல்லிபுரம் கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருந்த திருவிழாவைப் பார்ப்பதற்காக சென்றோம்.

மேற்படி கோவிலுக்கு செல்லும் வழியில் நாம் அச்சுவேலி பகுதியை நெருங்கிக் கொண்டிருந்த போது பெருமளவில் மக்கள் பெரும்பரபரப்படைந்தவர்களாக ஓட்டமும் நடையுமாக வீதியால் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தார்கள்,

சம்பவத்தைப்பற்றி அறிவதற்காக வாகனத்தை விட்டிறங்கி மக்களை அணுகி வினவினோம். பலாலி முகாமிலிருந்து தொடர்ந்து எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்படுவதாகவும் அதனால் உயிருக்கு அஞ்சித் தாம் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதன்போது எமது சாரதி எம்மை வழியில் கைவிட்டுவிட்டு காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியநிலை ஏற்பட்டது

இராணுவத்தினரின் எறிகணைக்கு இலக்கான பலர் பாதையின் இரு மருங்கிலும் கிடந்து துடி துடித்துக்கொண்டிருந்ததை காண முடிந்தது வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனவசதியின்மையால் இவர்கள் இவ்வாறு கிடப்பதாக அறிந்துகொண்டோம்.

இறுதியாக அச்சுவேலியில் இருந்து செய்திகளை திரட்டிக் கொண்டுவரும்போதும் காயமடைந்த ஒருவரையும் எமது வாகனத்தில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தோம் அவரது இரு கால்களும் முறிந்து இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

நாம் ஆஸ்பத்திரிக்கு வரும் வரை எமக்கு தெரியாது இப்படியொருயுத்தம் ஆரம்பமாகி விட்டது என்பது. அங்கு இலை குழைகளால் மறைக்கப்பட்ட வாகனங்கள் வந்து நின்றன இவை ஏன் இப்படி வருகின்றன என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை நாம் பீதியுடன் அவற்றைப் பார்த்துக்கொண்டுநின்றோம். அதில் காயமடைந்த விடுதலைப்புலிகளைக் கொண்டு வந்திருந்தார்கள் எம்மை எல்லா இடமும் அழைத்துச் சென்ற விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் தற்போது ''யாழ்தேவி'' என்ற இராணுவ நடவடிக்கையொன்று ஆரம்பித்திருப்பதாக எமக்குத் தெரிவித்தார் இந்த சண்டையின் நோக்கம் கிளாலியை கைப்பற்றுவதுதான் எனவும் அவர் கூறினார்

நாம் கிளாலிப் பகுதியைப் பார்ப்பதற்காகச் சென்று கொண்டிருந்தோம். அப்போது காட்டுப் பாதையூடாகவே எம்மை அழைத்துச் சென்றார்கள் ஏனெனில் அப்பகுதியில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்படித் தாக்குதல் நடைபெறும்போது சாரதிகள் நேரடியான பாதையில் செல்லமாட்டார்கள். மரம் செடிகள் நிறைந்த பாதையிலேதான் செல்வார்கள். ஒளிந்து ஒளிந்து தான் செல்வார்கள். அவ்வாறே நாம் தென்மராட்சிவரை சென்றோம். நாம் எமது பயணத்தை யுத்த களத்துக்கு செல்லாமல் இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நாம் அங்கிருந்து வடமராட்சி நோக்கிச் சென்றோம் அன்றிரவு முழுவதும் வடமராட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

யுத்தகளத்திற்தளமதுஉயிர்ப் பாதுகாப்புக் கருதியே அவர்கள் அழைத்துச்செல்லவில்லை. எமது உயிருக்கு விசேட உத்தரவாதம் அவர்களால் கொடுக்கவேண்டி இருந்தது. ஏனெனில் யாழ். சென்ற முதலாவது சிங்களச் செய்தியாளருக்கு ஏதாவது நடந்தால் அது தமக்குப் பெரும் அவமானமாக இருக்கும் என அவர்கள் கருதினார்கள்.

அங்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்துள்ளதாக இரண்டு மூன்றுநாட்களின்பின் தெரிந்துகொண்டோம் இருந்தாலும் ஊரடங்குச்சட்டம் அங்கு அமுல்படுத்தப்பட்டதாகத் தோன்றவில்லை சகல அலுவல்களும் தடையின்றி நடைபெற்றுக்கொண்டிருந்தன. பாடசாலைகள் இயங்கின மக்கள் வழமைபோல் தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தனர் நாமும் ஆர்வத்துடன் யாழ்நகர்முழுவதையும் சுற்றிப்பார்த்து எமக்குத் தேவையான செய்திகளை திரட்டினோம்

சாவகச்சேரியில்நடைபெற்ற விமானக்குண்டு வீச்சினால் இறந்தவர்களின் உடல்கள் யாழ் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டன இதில் சுமார் இருபது சடலங்கள் இருந்திருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன் இவர்கள் குண்டு விழுந்ததினால் மண் இடிந்து விழுந்து பங்கரை மூடியதனால்தான் மரணமடைந்தார்கள். மூன்று குடும்பங்களைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களும் இதில் இறந்திருந்தார்கள் இவர்களது உடல்கள் யாழ் வைத்தியசாலையில் குவிக்கப்பட்டுக் கிடந்தன. மனிதர் எவரும் அந்த சவ அறைப்பக்கம் செல்ல முடியாது நம் நெருங்கியபோது எமக்கு வாந்தி வந்தது. கொடிய துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. எனது வாழ்நாளில் அப்படியொரு துர்நாற்றத்தை நான் சுவாசித்தது கிடையாது, அங்கு நான்கு தடவைகள் நான் வாந்தி எடுத்தேன்,

யாழ். வைத்தியசாலை பிரேத அறை இப்படித்தான் என்றும் மின்சாரம் இன்மையால்தான் இந்த நிலை தொடர்வதாகவும் அங்கு கூடிநின்றவர்கள் கூறினார்கள்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல மரணச் சடங்கு வைபவங்களுக்குச் சென்றோம் யாழ்தேவி நடவடிக்கையின் போது மரணமடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களது மரணச்சடங்குகளுக்கும் நாம் சென்றோம் மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பெரியளவில் ஊர்வல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன இறுதிச்சடங்கு நடைபெற்ற கோப்பாய் ... சென்றிருந்தோம் அங்கு 22 விடுதலைப் புலிகளது உடல்கள் வைக்கப்பட்டிருந்தன ஆயிரக் கணக்கான மக்கள் அவ் உடல்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வந்திருந்தனர் சுன்னாகத்துக்கும் சென்றிருந்தோம் அங்கும் மரணமடைந்த 13 விடுதலைப் புலிகளின் உடல்கள் வைக்கப்பட்டிருந்தன அங்கேயும் அதிகளவு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர் அதேபோல வடமராட்சிக்கும் சென்றோம் அங்கு பெண் புலிகளது இறுதி மரியாதையுடன் மரணமடைந்த புலிகள் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன.

மேலும் யுத்தத்தின் மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் கலை இலக்கியங்களும் வளர்ச்சியடைந்து வருகின்றதையும் அவதானிக்க முடிகிறது

பொதுமக்களின் பொது வாழ்வு என்பது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில்நடைபெறுகிறது முக்கிய பொருள்களின் விலைகள் மடங்கு கணக்கில் உயர்ந்துள்ளன இவ்விலைவாசிக்கு முகம் கொடுப்பது மிகவும் சிரமமாக உள்ளது

பாடசாலை மாணவர்கள் தமக்கு வேண்டியகல்வி உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலையில் உள்ளனர் மாலை 6-00 மணிக்கு பின்னர் மாணவர்களால் படிக்கமுடிவதில்லை

வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஒரு மைல் தூரம் செல்வதற்கு 100ரூபா செலுத்தவேண்டியுள்ளது கொழும்பில் 1 50 சதம்செலுத்தி பஸ்ஸில் பயணம் செய்யக்கூடிய தூரத்திற்கு யாழ்ப்பாணத்தில் சுமார் 25 ரூபா செலுத்தவேண்டியுள்ளது

இவ்வளவு யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும் பல கலை நிகழ்வுகளைக் கண்டபோது மிகவும் ஆச்சரியமடைந்தோம் நாம் அரசசார்பற்ற நிறுவனம் நடாத்தும் கலைக் கூடம் ஒன்றைப் பார்க்கச்சென்றோம் அங்கு கலையுலகத்துடன் தொடர்புள்ள பலதரப்பட்டவர்களையும் சந்தித்தோம். பலர் மிகுந்த ஆர்வத்துடன் நாடகங்களை பயின்றுகொண்டிருந்ததைக் கண்டோம்.

அங்கு விடுதலைப்புலிகள் இந்தியப் பாடல்களை செவிமடுப்பது கிடையாது அவர்களிடம் வேறுபட்ட பிரசாரக் கலையொன்று உள்ளது. அவர்களால் புரட்சிப்பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் வெளியிடப்படுகின்றன. விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய நடன குழுஒன்று உள்ளது யுத்த நடவடிக்கைதீவிரமாகஇருந்தமையால் இதுதொடர்பான ஒரு கலை நிகழ்வுகளையும் பார்க்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

---

## கணனியின்

னர்.

இவ் ஒப்பந்தத்துக்கு அமையவே மேற்படி கணனி நிறுவனத்துக்கு மேற்படி தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எம். ரகத்தைச் சேர்ந்த மேற்படி கணனி ஒன்றின் தற்போதைய விலை எண்பதினாயிரம் ரூபா மட்டுமே. ஆனால் ஏன் இவ்வாறு அதிகளவு செலவு செய்யப்பட்டு இக் கணனியைத் திருத்துவ...

வடமராட்சிக் கோட்ட மனைப் பொருளியல் வள நிலையத் திறப்புவிழாவும் கண்காட்சியும் திட்டமிட்டபடி 27-10 93, 28 10-93 ஆகிய திகதிகளில் நடைபெறமாட்டாது. பிற்போடப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
(சி/7776)

திருமதி யோ. கந்தசாமி
சே. ப. ஆ. ஆலோசகர்
மனைப்பொருளியல்

## 60-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### பரமசாமி சிறிஜெயன் (வீடியோ சிறி)

Hi Tech Video Ontario Canada (உரிமையாளர்)

மலர்வு 15 07-1964 — உதிர்வு 26 08-1993

சிந்துதே கண்ணீர் அந்தோ
சிறிஜெயா உன்னை எண்ணி
எந்தையர் தமிழை யாங்கு
எழில்பெறச் செய்ய நீயும்
மைந்தனே கனடா சென்றாய்
மாய்ந்தது உடலமானாலும்
மாண்புகழ் ஓங்கு ஐயா
மேதினி மறக்குமோ உன்னை?

குறிப்பு: மைந்தனின் மரணச்செய்தி அறிந்த உடன் கனடாவில், நேரில் கலந்து கொண்டு உதவிய உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் எமக்கு அனுதாபச்செய்திகள் தந்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக!

உன் பிரிவால் துடிக்கும்

அம்மா, சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள்,
பெறாமக்கள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மட்டுவில் தெற்கு,
மடத்தடி, சாவகச்சேரி.
[6369]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்ப் பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான செயன்முறைத் தேர்வு வரும் நவம்பர் 6ஆம், 7ஆம், திகதிகளில் முன்னரே அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் நடைபெறுமெனவும், தேர்வாளருக்கான கருத்தரங்கு கல்விக் கோட்ட ரீதியாக பின்வரும் திகதிகளில் நடைபெறுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்;

யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டம்: 3 11-93 புதன் கிழமை மு. ப. 9-00 மணிக்கு யா/யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி பண்டபம், மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்டம்: 3-11 93 புதன் கிழமை பி. ப 2 00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபம், வடமராட்சிக் கல்விக்கோட்டம்: 4 11 93 வியாழக்கிழமை மு. ப. 9 மணிக்கு யா/மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரி மண்டபம். தென்மராட்சிக் கல்விக்கோட்டம்: 4 11 93 வியாழக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபம்.

## யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ். தேவரையாளி இந்து ம. வி. அணியை எதிர்த்து உரும்பராய் இந்துக் கல்லூரியும் உடுப்பிட்டி அ மி.க அணியை எதிர்த்து ஏழாலை சிறீமுருகன் அணியும் மோதுகின்றன

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து சண்டிலிப்பாய் ம. வியும், புனித ஜேம்ஸ் ம. வி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் அணியும், கனகரத்தினம் ம.ம.வியை எதிர்த்து அருணோதயாக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

மட்டுவில் ம வி மைதானத்தில் சாவகச்சேரி இந்து அணியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வி அணியும், கொடிகாமம் திருநாவுக்கரசுவை எதிர்த்து யூனியன் கல்லூரியும், யாழ் இந்துக்கல்லூரியை எதிர்த்து புங்குடுதீவு சண்முவானந்தாவும் மோதுகின்றன.

### இன்று வருகைதரவும்

1992 ஏப்ரல் வ் சேட க. பொ. த. (உ/த) பரீட்சையில் தோற்றி அண்மையில் வெளியான வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர் வரும் வியாழக்கிழமை நடத்தவிருக்கும் பேரணியில் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மகஜரில் கையொப்பமிடநேற்று பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் யாழ்.இந்துக்கல்லூரியில் கூடினர். மகஜரில் கையொப்பம் இடாத பாதிக்கப்பட்ட மாணவர்கள் இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் தவறாது கூடுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது

### எல்லோரும்

முடித்து விட்டு படையினர் திரும்பிவந்த பின்னர் கிளாலியில் மீண்டும் சில படகுகள் நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. படையினர் உரிய வேளையில் மீண்டும் தனது நடவடிக்கையை ஆரம்பிப்பார்கள் என அவர் விபரித்தார்.

### சிறிலங்கா

ஒழிப்பதற்கான சர்வதேச நிலையம் மற்றும் உலக தொழில் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகள் உட்பட 15 அரச சார்பற்ற அமைப்புகள் இந்த தீவில் தொடரும் ஆயுதப் போரையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்ததுடன் பின் வரும் பிரகடனத்தையும் வெளியிட்டன.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எதுவும் அடிப்படையான பிரச்சினையை தீர்ப்பதாகவும் இலங்கையின் ஒற்றையாட்சி முறைக்குள் உள்ளடக்கியதான நிரந்தர சிங்கள பெரும்பான்மையினரால் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்படும் விரிவடைந்தும், ஆழமுமாகவும் செல்லும் ஒடுக்கு முறைகளின் ஒரு பிரதிபலனாக எழுந்ததே சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் என்பதையும் அங்கீகரிப்பதாகவும் இருக்கவேண்டும்.

இலங்கைத் தீவில் வடக்கு-கிழக்கில் வசிக்கும் தமிழ் மக்கள் தமது அரசியல் சுய அந்தஸ்தை சுயாதீனமாக தெரிவு செய்யும் உரிமையுடன் கூடிய ஒரு மக்கள் என்பதை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரிக்க வேண்டும்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு உங்களுடைய பகிரங்கமான ஆதரவை நாம் கோருகின்றோம்.

இவ்வாறான உங்களுடைய அங்கீகாரம் கடந்த பத்து வருட காலத்தில் அதிகரித்துச் செல்லும் மனித உயிர்ப் பலிகளையும், இன்னல்களையும் கொண்டுள்ள ஒரு பிரச்சினைக்கு தீர்வுகாண வழியை ஏற்படுத்தும் என நாம் நம்புகின்றோம்.

இவ்வாறு இக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்லாமல் இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் நாம் அங்கிருந்து வடமராட்சி நோக்கிச் சென்றோம் அன்றிரவு முழுவதும் வடமராட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

யுத்தகளத்திற்தளமதுஉயிர்ப்

### கணனியின்

னர்.

இவ் ஒப்பந்தத்துக்கு அமையவே மேற்படி கணனி நிறுவனத்துக்கு மேற்படி தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எம். ரகத்தைச் சேர்ந்த மேற்படி கணனி ஒன்றின் தற்போதைய விலை எண்பதினாயிரம் ரூபா மட்டுமே. ஆனால் ஏன் இவ்வாறு அதிகளவு செலவு செய்யப்பட்டு

இக் கணனியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற கேள்வி மேற்படி உயர் கல்வி நிறுவன அதிகாரிகள் மட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இக் கணனியைத் திருத்தும் முயற்சிக்குப் பின்னணியில் பெரும் பணமோசடி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது குறித்தும் தற்பொழுது சந்தேகம் ஏற்பட்டுள்ளது

இதேவேளை இத்திருத்த வேலை குறித்து இந்த உயர் கல்வி நிறுவனத்தின் தலைவருக்கு இதுவரை தெரிவிக்கப்படவில்லை என அறியவருகிறது.

### யாழ்.

படி கல்வி ஆண்டுக்கென பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட வெட்டுப்புள்ளித்திட்டத்துக்கு வடபகுதியில் பல்வேறு தரப்பிலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மாற்றும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை மீள் பரிசீலனை செய்வதற்காகவே தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பட்டியல் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படாமல் தாமதிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுதியாகக் கூறுவதற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க),(நி)

த்தது கிடையாது, அங்கு நான்கு தடவைகள் நான் வாந்தி எடுத்தேன்,

யாழ். வைத்தியசாலை பிரேத அறை இப்படித்தான் என்றும் மின்சாரம் இன்மையால்தான் இந்த நிலை தொடர்வதாகவும் அங்கு கூடிநின்றவர்கள் கூறினார்கள்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பல மரணச் சடங்கு வைபவங்களுக்குச் சென்றோம் யாழ்தேவி நடவடிக்கையின் போது மரணமடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களது மரணச்சடங்குகளுக்கும் நாம் சென்றோம் மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் பெரியளவில் ஊர்வல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன இறுதிச்சடங்கு நடைபெற்ற கோப்பாய் மயானத்துக்குச்

நாம் அரசசார்பற்ற நிறுவனம் நடாத்தும் கலைக் கூடம் ஒன்றைப் பார்க்கச்சென்றோம் அங்கு கலையுலகத்துடன் தொடர்புள்ள பலதரப்பட்டவர்களையும் சந்தித்தோம். பலர் மிகுந்த ஆர்வத்துடன் நாடகங்களை பயின்றுகொண்டிருந்ததைக் கண்டோம்.

அங்கு விடுதலைப்புலிகள் இந்தியப் பாடல்களை செவிமடுப்பது கிடையாது அவர்களிடம் வேறுபட்ட பிரசாரக் கலையொன்று உள்ளது. அவர்களால் புரட்சிப்பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள் வெளியிடப்படுகின்றன. விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய நடனகுழுஒன்று உள்ளது யுத்த நடவடிக்கைதீவிரமாகஇருந்தமையால் இதுதொடர்பான ஒரு கலை நிகழ்வுகளையும் பார்க்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 24.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11385

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-6007, 41-5178, 41-8155, 26-5814, 24-5119, 26-2502, 40 7584, 26 5244, 24-5737, 27-9791, 24-8353, 27 4019 44-5417, 41-1531, 24 1056, 27-5535 26 8810, 43-6657, 43 5053, 24-6699, 41 8467, 27 5449, 27-6493, 24-4323, 24-2493, 26-2421, 24-7173, 24-1127, 42 3329, 27-4239, 23 3890, 42 9325, 27-9825, 43-3368, 26-0512, 42 1750, 27-6769, 22 9005

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-2394, 26 4882, 24-6475, 24 6065, 26-9140, 27 9764, 26-1253, 27 8125, 26 2391, 24 9596, 24 7087, 27-9626, 43 4065, 42-3927, 24 9856, 28-4550, 27 6762, 40-1516, 41-9997, 26 9626, 26 1690, 41 8192, 27-8164, 24 5529, 24-7628, 41 9659.

## 2-ம் ஆண்டு நினைவுகள்



### குமாரசாமி சண்முகலிங்கம்

தோற்றம்: 1960 05-30 — மறைவு: 1991-10-25

ஆண்டிரண்டு சென்றதே
இன்றும் ஆறவில்லை நெஞ்சிலே
— உன் நினைவுகள்
அதனால் வேண்டுகிறேன்
உன் ஆத்மா சாந்திபெற

யாழ்ப்பாணம். (6377) -நண்பர்கள்